நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : 3/2025

வழக்கு சாட்சி : PW1 (LW1)

| | | |
|---|---|---|
| பெயர் | : | சூரியமூர்த்தி |
| தந்தை பெயர் | : | கோவிந்தசாமி |
| கிராமம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 56 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 11**.08.2025**

(<u>எதிரி ஆஜர். </u>)

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்சமயம் வசித்து CPCL நிறுவனத்தில் மூத்த மேலாளராக பணிபுரிந்து செய்து வருகிறேன். எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமாக 600 ஏக்கர் நிலம் உள்ளது, புதிதாக 616 ஏக்கர் நிலத்தினை எங்கள் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளளது. அந்த நிலத்தில் 17கி.மீட்டர் சுற்றளவில் இரும்பு கம்பியிலான வேலியை போட்டு இருந்தோம். தினமும் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் உதவி பாதுகாப்பு அதிகாரிகளான கருணாநிதி மற்றும் சௌந்தரராஜன் வேலிகளை பார்வையிட்டு வருவது வழக்கம். கடந்த 14.11.2024 அன்று வழக்கம் போல் மேற்படி உதவி பாதுகாப்பு அதிகாரிகள் பார்வையிட்டபோது 400 அடி தூரத்திற்கு அமைக்கப்பட்ட கம்பி வேலி காணாமல் போயிருந்தது. அந்த தகவலை எங்கள் நிறுவனத்தின்HR துறையின் பொது மேலாளரிடம் கூறியுருந்னர்.நான் அலுவலக வேலை சம்பந்தமாக வெளி ஊர் சென்று விட்டு 18.11.2024ம் தேதி அன்று பணிக்கு வந்தேன். மேற்படி தகவலை எங்கள் நிறுவனத்தின் HR துறையின் பொது மேலாளர் என்னிடம் கூறினார். எனக்கு கிடைத்த தகவலின் படி கோபுராஜபுரத்தை சேர்ந்த ராமமூர்த்திதான் எங்களது நிறுவனத்தின் இரும்பு வேலியை திருடியதாக தெரியவந்ததன் அடிப்படையில் நான் புகாரினை அன்றைய தினமே திட்டச்சேரி காவல் நிலையம் சென்று கொடுத்தேன். என்னிடத்தில் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார்

மனு **அ.சா.ஆ.1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மறுநாள் 19.11.2024ஆம் தேதியன்று போலிசார் எனக்கு எங்களுடைய கம்பி வேலி கிடைத்து விட்டதாக கூறினார். கோபுராஜபுரத்தை சேர்ந்த ராமமூர்த்தியின் தோட்டத்திற்கு என்னை வருமாறு கூறினார். நானும் சுமார் மதியம் 3,00 மணியளவில் சென்றறேன். ஆஜர் எதிரியை எனக்கு சம்பவத்திற்கு முன்பே தெரியும். ஆஜர் எதிரி அவருடைய தோட்டத்தில் எங்களுடைய இரும்பு வேலிகளை போட்டு இருந்தார். மீதம் இருந்த இரும்பு கம்பி வேலியை சுருட்டி அவருடைய தோட்டத்தில் வைத்திருந்தார். நான் எங்கள் நிறுவனத்தின் கம்பி வேலிகளை போலிசாருக்கு அடையாளம் காட்டினேன்,. போலிசார் எனக்கு மேற்படி கம்பி வேலிகளை திருடியது ஆஜர் எதிரிதான் என்று எனக்கு அடையாளம் காட்டினர். அதன்பிறகு கம்பி வேலிகளை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொள்ளவில்லை. கம்பி வேலிகள் நீதிமன்றத்தில்தான் உள்ளது. தற்போது நீதிமன்றத்தில் புகைப்படத்தில் காட்டப்படும் கம்பி வேலிகள் எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமானதுதான். **புகைப்படத்தில் உள்ள கம்பி வேலிகள் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

இந்த வழக்குதொடர்பாக போலிசார் என்னை எந்த தேதியில் விசாரணை செய்தார்கள் என்றால் 19.11.2024. நான் எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது புகார் மனுவிலும் மேற்படி எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது புகார் மனுவில் எனது நிறுவனத்திற்கு 600 ஏக்கர் சொந்தமான நிலம் உள்ளது என்று கூறியுள்ளேனா என்றால் இல்லை. புதிதாக 616 ஏக்கர் நிலத்தினை எங்கள் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது என்ற விவரம் புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. 17கி,.மீட்டர் சுற்றளவிற்கு இரும்பு கம்பியாலான முள் வேலி போடப்பட்டதாக எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகள் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

CPCL நிறுவனத்தில் நான் எத்தனை ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன்

என்றால் 32 ஆண்டுகள். ஆகையால் எனக்கு CPCL நிறுவனத்தின் பூகோள அமைப்பு நன்றாக தெரியுமா என்றால் தெரியும். CPCL நிறுவனத்தின் நுழைவாயில் பனங்குடி பஞ்சாயத்திற்குற்பட்ட சன்னமங்கலம் என்ற கிராமம் என்றால் சரிதான்.

எங்கள் நிறுவனம் புதிதாக கையகப்படுத்திய 616 ஏக்கர் நிலம் கோபுராஜபுரம் பஞ்சாயத்து வெள்ளப்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவை அல்ல என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனத்தை சேர்ந்த நில ஆக்கிரமிப்பு துறை அதிகாரிகளுக்கு தான் தெரியும். மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள முக்காவட்டத்து கன்னிவாய்க்காலுக்கு வடக்கே உள்ள நிலங்கள் தான் CPCL நிறுவனத்திற்கு சொந்தமான நிலங்கள் என்றும் அதற்கு தெற்கே அமைந்துள்ள நிலங்கள் CPCL நிறுவனத்திற்கு சொந்தமான நிலங்கள் அல்ல என்றால் எனக்கு சரியாக தெரியாது.

சௌந்தரராஜன் மற்றும் கருணாநிதி ஆகிய பட்டியல் சாட்சிகள் மேலாளர் ஸ்ரீதர் என்பவருக்கு எழுத்து மூலமாக சம்பவத்தை குறித்து புகார் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த புகாரை நான் பார்த்தேனா என்றால் நான் பார்த்தேன். கோபுராஜபுரத்தை சேர்ந்த ராமமூர்த்திதான் கம்பி வேலிகளை எடுத்துச் சென்றதாக எனக்கு யார் தகவல் சொன்னார் என்றால் எங்கள் நிறுவனத்தின் பொது மேலாளர் தான்.

திருடுபோனதாக கூறப்படும் கம்பி வேலிகளின் எடை பற்றி கூற முடியுமா என்றால் சரியாக தெரியாது. திருடுபோனதாக கூறப்படும் கம்பி வேலிகளை ஒரு நபரால் தூக்கி செல்ல முடியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரிதான் மேற்படி இரண்டு கம்பி வேலிகளை தூக்கி சென்றதை பார்த்ததாக யாராவது கூறினார்களா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்திற்கு தென் கிழக்கு பகுதியில் வட்டாறு உள்ளது என்றால் சரிதான். வட்டாறு பாயும் பகுதிகளில் வெள்ளப்பாக்கத்தை தவிர மற்ற நிலங்களை எங்கள் நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது என்றால் சரிதான். எங்கள் நிறுவனம் கையகப்படுத்திய நிலம் தொடர்பாக அங்குள்ள விவசாய தொழிலாளர்கள் மற்றும் நில உரிமையாளர்கள் போராட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். நில ஆர்ஜிதம் சட்டம் 2013 கீழ் மேற்படி நில உரிமையாளர்களுக்கு தகுந்த நஷ்டஈடு வழங்க கோரிதான் ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். போராட்டத்தில் ஈடுபட்ட விவசாய தொழிலாளர்கள் மற்றும் நில உரிமையாளர்களுக்கு மறுவாழ்விற்கு தேவையான

உதவிகளை செய்து கொடுப்பதாக கூறிதான் தான் போராட்டத்தை கைவிட செய்தார்கள் என்றால் அரசாங்கத்தால் வாக்குறுதி கொடுகக்பட்டது. ஆஜர் எதிரி கோபுராஜபுரத்தில் முன்னால் ஊராட்சி மன்ற தலைவர் என்பதாலும் அவர் போராட்டத்தை முன்னின்று நடத்தியதாலும் அவர் மீது பொய்யாக திருட்டு வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி வீட்டிற்கு வழக்கு தொடரபாக நான் எத்தனை முறை சென்றேன் என்றால் போலிசார் அழைத்தற்கு ஒரு முறை சென்றேன். நான் சென்ற போது ஆஜர் எதிரி வீட்டில் திருடுபோனதாக சொல்லப்படும் கம்பி வேலிகள் அங்கு இல்லை என்றும் வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆஜர் எதிரி வீட்டிற்கு போலிசார் அழைத்துச் சென்றபோது அங்கு ஆஜர் எதிரி இருந்தாரா என்றால் இல்லை.

போலிசார் மற்றும் நிறுவன அதிகாரிகள் கைப்பற்றப்பட்ட இரும்பு கம்பிகளை சம்பவ இடத்தில் பொறுத்தி பார்த்தார்களா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான நிலத்தில் 17 கி.மீட்டர் சுற்றளவிற்கு பொறுத்தப்பட்ட கம்பி வேலிகள் உள்ளதா இன்னமும் என்றால் உள்ளது. எவ்வளவு சுற்றளவு தூரத்திற்கு கம்பி வேலிகள் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. கோபுராஜபுரத்தின் முன்னால் ஊராட்சி மன்றத் தலைவரான ஆஜர் எதிரிக்கு எங்கள் நிறுவனத்தின் கம்பி வேலிகளை திருடி செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றால் சரியல்ல. விவசாயிகளுக்கான மறுவாழ்விற்கு தேவையான நஷ்டஈடு தொகையினை கொடுக்க வேண்டும் என்று போராட்டம் செய்தததை மனதில் வைத்துக்கொண்டு எதிரி மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

AISHWARYA R

Digitally signed by AISHWARYA R
Date: 2025.08.11 19:14:14 +0530